Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.182/2021

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சக்தி | Occupation | ஓட்டுநர் |
| Father’s name | கந்தசாமி | Calling | |
| Village | புத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of September 2025.

<u>24.09.2025</u>

எதிரி ஆஜர் .

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ராஜபாளையம், புத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான்ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 சுந்தரம்மாளை தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். வழக்கு சம்மந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் லோடு ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி அய்யாச்சாமி எங்கள் ஊரில் ஆடுகளை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். பொதுவாக எதிரி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடததிற்கு ஆடுகளை கொண்டு செல்லும்போது எனது ஆட்டோ வாடகைக்கு எடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. எதிரி வாடகைக்கு எனது ஆட்டோவை பயன்படுத்துவது வழக்கம் என்றாலும், எதிரி எனது ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக

பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 14.10.2012 அன்று ஆஜர் எதிரி, சுந்தரம்மாள் என்பவரிடமிருந்து 16 ஆடுகளை வாங்கி எனது ஆட்டோவில் ஏற்றி செல்லவேண்டுமென்று எனக்கு தகவல் கூறினார் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கூறியதன் பேரில் சுந்தரம்மாள் வீட்டிலிருந்து 16 ஆடுகளை பெற்று புத்தூரிலுள்ள எதிரியின் வீட்டில் இறக்கிவிட்டேன் என்றால் சரியல்ல. ப.சா.1 ன் வீட்டில் ஆடுகளை ஏற்றும்போது எதிரி ஆடுகளை பெற்றுக்கொண்டு அதற்கான பணத்தை ஆடுகளை விற்றுவிட்டு தருவதாக ஏற்றிச்சென்றார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி 16 ஆடுகளை சுந்தரம்மாளிடம் பெற்றுக்கொண்டு அதற்கான தொகையான ரூ.82,000/- ஐ அவரிடம் கொடுக்கவில்லை என்பதும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி பணத்தை ஆஜர் எதிரி ப.சா.1 இடம் கொடுக்காததால் தான் எதிரி மீது புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றாலும், ஆஜர் எதிரி எனது ஊர்க்காரர் என்பதால் அவர் மீது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.182/2021

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.மாடசாமி | Occupation | வெல்டிங் |
| Father’s name | கந்தையா ஆசாரி | Calling | |
| Village | ராஜபாளையம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of September 2025.

24.09.2025

எதிரி ஆஜர் .

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையம், எம்.ஆர் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும பார்வை மகஜரிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு காலை சுமார் 11 மணியளவில் ராஜபாளையம் புதிய பேருந்து நிலையத்திலிருந்தபோது பேோலுசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். தயார் செய்த பார்வை மகஜரில் நானும் கையெழுத்து செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ 1. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் ராஜபாளையம் ராஜுஸ் கல்லூரியின் எதிரே உள்ள வெல்டிங் கடையில் வேலை செய்து வருகிறேன். நான் காலை 8.30 மணியளவில் வேலைக்கு சென்றுவிட்டு இரவு 7 மணியளவில் திரும்பி வருவேன். எனது வீட்டிலிருந்து ராஜபாளையம் தெற்கு காவல்நிலையம் வழியாகத்தான் வேலைக்கு செல்லவேண்டும் எனறால் சரிதான். நான் மேற்படி படம் வரைந்திருந்ததாக கூறிய தாளில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அந்த

வழியாக காவல்நிலையம் வந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. ராஜபாளையம் புதிய பேருந்துநிலையத்தில் நான் அமர்ந்திருந்தபோது அங்கு வைத்து கையெழுத்து செய்தேன். நான் எனது வேலைக்கு செல்லும்போது காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.